# ஆகமங்களின் அடிப்படை ஒற்றுமை

***Article presented by Shri N.R. Bhat presented in the***

VYASA BHARATA AGAMA SHILPA SADAS
at Ilayathangudi, Tamilnadu in 1962

இந்த உலகத்தை எதற்காக விரும்புகிறோம்? பணம், மனைவி, குழந்தைகள் இவற்றை எதற்காக விரும்புகிறோம்? நாம் உலகத்தில் இருப்பதற்காக உலகத்தை விரும்பவில்லை. நம்மைத் தெரிந்துகொள்வதற்காக அவற்றை விரும்புகிறோம். இப்போது உலகத்தில் விஞ்ஞானிகள் உலகத்தை அறிந்துகொள்ளப் பெருமுயற்சி செய்து வருகிறார்கள். ஆனால், இந்த உலகத்தை எதற்காக விரும்புகிறோமோ அதற்காக, அந்த ஆத்மாவைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் இன்னும் வரவில்லை.

“ந வா அரே ஸர்வஸ்ய காமாய ஸர்வம் ப்ரியம் பவதி; ஆத்மநஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி. ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:.”

நம்முடைய பிரியத்துக்காகத்தான் எல்லாவற்றையும் விரும்புகிறோமே தவிர, எல்லா வஸ்துக்களுடைய பிரியத்துக்காவும் நாம் அவற்றை விரும்பவில்லை. ஆகையால் ஆத்மாவை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும் என்று உபநிஷத்துகள் சொல்லுகின்றன.

இந்த ஆத்ம தத்துவத்தைக் தெரிந்துகொள்வது சுலபமான காரியம் அல்ல. தந்திர சாஸ்திரங்களிலே இந்த ஆத்ம தத்துவங்களைத் தெரிந்துகொள்ளப் பல வழிகள் சொல்லப்பட்டுள்ளன. அந்த வழிகளும், யோக சாஸ்திரம் கூறும் வழிகளும் ஒரே மாதிரி இருக்கும். உதாரணமாக, பிராணாயாமம் முதலிய சாதனங்களாலே தியானம் செய்யும் முறையை அப்பியாசம் செய்து இந்தத் தேகத்தை நமக்கு வசமாக்கிக் கொண்டு, அணிமாதி சித்திகளை நாம் பெறலாம் என்று அவை சொல்கின்றன. யோகத்தினால் சக்தி வளர்ந்து பல பெரும் காரியங்களை இக்காலத்தில்கூடப் பல யோகிகள் செய்து காட்டுவதை நாம் பார்க்கிறோம். தந்திர சாஸ்திரத்தில் சொல்லும் வழிகள்

விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்ளக் கூடியவையாக இருக்கின்றன.

இத்தகைய தந்திர சாஸ்திரங்கள் பல்வேறு நாடுகளில் வளர்ந்து வந்தன. சைவம், வைணவம், சாக்தம் என்று நமது ஹிந்து மதத்தைச் சேர்ந்தவை மட்டும் அல்ல, பௌத்த தந்திரங்கள், ஜைன தந்திரங்கள் கூட வளர்ந்து வந்தன. இந்தத் தந்திரங்கள் திபெத் தேசத்துக்கும் போய் அங்கும் வளர்ந்து வந்தன. இப்படித் தந்திர மார்க்கங்கள் பிற மதங்களுடைய வழிபாடுகளில் போய் வளர்ந்து வந்தது மாத்திரம் அல்ல; நம் நாட்டில் இதர கிரந்தங்களிலும் புகுந்து கொண்டன. புராணங்களைப் பார்த்தால் இதைக் கண்டுபிடிக்கலாம்.

அக்னி புராணத்தில் தந்திர சம்பந்தமான பல விஷயங்கள் சேர்ந்திருக்கின்றன. அப்படியே சிவ புராணம், லிங்க புராணம், விஷ்ணு தர்மோத்தரம் ஆகியவற்றிலும் தந்திர சம்பந்தமான பல அம்சங்களைக் காணலாம். வைத்திய சாஸ்திரத்திலும், ரசாயன சாஸ்திரத்திலும், சித்தவைத்திய

நூல்களிலும் தந்திர சம்பந்தமான பிரயோகங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆகமங்களிலோ, உபாகமங்களிலோ அவசியமான சில இடங்களில் ஸூக்ஷ்மமாகச் சொல்லப்பட்ட ஷட்கர்மபாகங்கள் மட்டும் பிறகு பிரபலமாக வளர்ந்து வாமாசாரம் என்ற ஒரு தனி மார்க்கமாக உருவெடுத்தன. இந்த வாமாசாரம், காபாலிகம், சில சாக்த மந்திரங்கள், பௌத்த மந்திரங்கள் ஆகியவை சில தந்திரங்களில் விஸ்தாரமாகக் காணப்படுகின்றன. இந்தத் தந்திர சாஸ்திரம் அந்நிய மதங்களுடைய ஆசாரத்தில் மட்டும் அல்ல, வைதிக கர்ம காண்டத்திலும் புகுந்து கொண்டது என்ற உண்மை, சரித்திர ஆராய்ச்சிக் கண் கொண்டு பார்த்தால் தெரியவரும்.

நம் நாட்டின் வரலாற்றைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம். புத்தகங்களைப் பார்த்தால் பழைய காலத்தில் வைதிக மார்க்கத்தில் மூர்த்தி பூஜை இருந்ததாகத் தெரியவில்லை. நித்திய கர்மா நுஷ்டானங்களைச் சொல்லும் பழைய க்ருஹ்ய ஸூத்திரங்களில் அர்ச்சனா

விதிகளைக் காண முடியாது. அங்கே தேவயஜ்ஞும் என்று ஒன்று சொல்லியிருக்கிறது. தேவ யஜ்ஞும் என்றால் சமித்துகளை அக்கினியில் ஹோமம் செய்வதுதான். ஸ்நான சந்தியாதிகளை முடித்த பிறகு யக்ஞுங்கள் செய்யவேண்டும். தேவ யக்ஞும், ரிஷி யக்ஞும், பித்ரு யக்ஞும், மனுஷ்ய யக்ஞும், பூத யக்ஞும் என்று ஐந்து யக்ஞுங்கள் உண்டு. ரிஷி யக்ஞும் வேத பாராயணம் செய்வது. பித்ரு யக்ஞும் ஜலதர்ப்பணம் கொடுப்பது. அதிதிகளுக்கு அன்னமிடுதல் தான் மனுஷ்ய யக்ஞும். பலி கொடுப்பது பூத யக்ஞும். இப்படிச் சொல்லப்பட்ட யக்ஞுங்களில் தேவ யக்ஞும் என்னும் பகுதியில் தான் தேவ பூஜை வந்து புகுந்தது. ஆகமங்களில் கூடப் பூஜையை யாகம் என்றுதான் சொல்கிறார்கள். அந்தர்யாகம் என்பது, இருதய கமலத்தில் தியான ரூபத்தில் பகவானைப் பூஜிப்பது. பஹிர்யாகம் என்பது லிங்கத்திலோ மூர்த்தத்திலோ பூஜை செய்வது. இந்தத் தேவபூஜை க்ருஹ்ய பரிசிஷ்டங்களில் சொல்லப்பட்டிருக்கிறதே தவிரப் பழைய க்ருஹ்ய ஸூத்திரங்களில் கர்மா நுஷ்டானம் சொல்வதற்காக வந்த

க்ருஹ்ய ஸூத்திரங்களில் இதைக் காண இயலாது. அதனால் பழைய காலத்தில் வைதிக கர்மத்தில் தேவபூஜை அல்லது தேவாராதனை என்ற தர்மம் சொல்லப்படவில்லையென்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

பழைய வேதகாலத்தில் துதிக்கப்பட்ட தேவதைகள் சூரியன், அக்கினி, பிரஜாபதி, சோமன், வனஸ்பதி. இந்திரன், ஸ்வர்க்கம், பூமி, தன்வந்திரி, விச்வேதேவர்கள், பிரம்மன் முதலியோர். மூர்த்திகளைப் பற்றிய விவரம் பழைய வைதிகர்களுக்கு ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்னரே தெரிந்திருக்க வேண்டுமென்று சொல்வதற்கு ஆதாரம் உண்டு.

பாணினியின் “ஜீவிகார்த்தே சாபண்யே” என்ற ஸூத்திரத்தில் இரண்டு விதமான மூர்த்திகளைப்பற்றிய குறிப்பு இருக்கிறது. ஒன்று, ஒருவன் தன்னுடைய வயிற்று வளர்ப்புக்காக வைத்துக்கொண்டிருக்கிற மூர்த்தி; இரண்டாவது, விற்பதற்காகக் கடைகளில் வைத்திருக்கும்

மூர்த்தி. பதஞ்சலி முனிவர் இந்த ஸூத்திரத்துக்குப் பாஷ்யம் எழுதின போது, "மௌரியர்கள் பணத்துக்காக ஆசைப்பட்டு மூர்த்திகளைச் செய்து விற்றார்கள். அப்படி விற்பனைக்காக வைக்கப்பட்ட மூர்த்திகளை, சிவக: ஸ்கந்தக: என்று சொல்ல வேண்டும். வயிற்று வளர்ப்புக்காக வைக்கப்பட்ட மூர்த்திகளை, சிவ: ஸ்கந்த: என்று சொல்ல வேண்டும்" என்கிறார். இப்படி வயிற்று வளர்ப்புக்கென்று குறிக்கப்பட்ட மூர்த்திகள் கோயில் மூர்த்திகளாகத்தான் இருக்க வேண்டும். கோயில்களில் மூர்த்தி பூஜை செய்பவனை வயிற்று வளர்ப்புக்காக மூர்த்திகளை வைத்துக்கொண்டிருப்பவன் என்று சொன்னால், அந்தக் காலத்தில் வைதிக தர்மத்தைத் தொடர்ந்து வந்தவர்களுக்குக் கோயில் பூஜை மிக்க பரிகாசமாக இருந்ததோ என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் தந்திர சாஸ்திரத்தினுடைய பிரபாவத்தையும் பெருமையையும் பார்த்துப் பார்த்து வைதிக கர்மத்தைச் செய்பவர்களும் கொஞ்சங் கொஞ்சமாக மூர்த்தி பூஜைக்கு இடம் கொடுத்தார்கள்.

இப்படிக் கொஞ்சமாக மூர்த்தி பூஜை புகுந்த காலத்தில் தான் லௌகாக்ஷிக்ருஹ்ய ஸூத்ரம் முதலியவற்றில் பிரதிமைகளின் பெயர்களும் கோயில்களுடைய பெயர்களும் காணப்படுகின்றன. மகாபாரதத்திலும் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்திலும் கோயில்களிலுள்ள மூர்த்திகளைக் குறிப்பிடும் சப்தங்கள் இருக்கின்றன. இப்படிப் பார்த்தால் ஐந்தாம் நுற்றூண்டுக்கு முன்னரே வைதிக சமாஜத்துக்கு மூர்த்தி பூஜையைப்பற்றித் தெரிந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

ஒரு காலத்தில் வைதிக மார்க்கமும் தந்திர மார்க்கமும் தனித்தனியே சுத்தமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இதற்குரிய குறிப்புகளைச் சாக்த கிரந்தங்களிலோ வைகானஸ ஸூத்திரங்களிலோ பார்க்க முடியவில்லை. அவற்றில் வைதிக மந்திரங்கள் இல்லாமல் கர்மா நுஷ்டானம் பண்ணவே முடியாது. பாஞ்சராத்திரத்திலே கொஞ்சம் காணலாம். பாஞ்சராத்திர மார்க்கத்திலே ஆத்மார்த்த பூஜை செய்ய நாலுவர்ணத்துக்கும் அதிகாரம்

உண்டு. பரார்த்த பூஜைக்கு மட்டும் ஆசாரியதீக்ஷை பெற்றவனாக இருக்க வேண்டும். ஆகையினால் வேத மந்திராதிகாரம் இல்லாதவர்களும் மூர்த்தி பூஜை செய்யும் வழிகளைச் சொல்லியிருப்பதைப் பார்த்தால், வைதிக கர்மத்தின் சம்பந்தம் இல்லாமலே பூஜை செய்யும் வழி இருந்துவந்தது என்பது தெரியும்.

சைவாகமங்களை ஆராய்ந்து பார்த்தால் ஒரு காலத்தில் வைதிக மார்க்கமும் ஆகம மார்க்கமும் தனித்தனியாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று சொல்லவேண்டியிருக்கிறது. பிறகு கொஞ்சங் கொஞ்சமாக வைதிக சம்பந்தம் ஏற்பட்டுவிட்டமையால், எல்லாம் வேதத்தினுடைய சாரமாகையால் வைதிக தர்மங்களும் ஆகம கர்மங்களும் ஒன்று என்று சொன்னார்கள். கர்ம மார்க்கங்களும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து இணைந்துவிட்டன.

தேவபூஜை வைதிக கர்மத்தில் சேர்ந்ததுபற்றிப் பல பேர் பல காரணங்களைக் குறிப்பிடுகிறார்கள். புத்தருடைய அஹிம்ஸா தத்துவத்தின் பலத்தினால் நம் நாட்டில்

வேள்விகள் குறைந்து வந்தன என்றும், அதற்குப் பதிலாகத் தேவபூஜைகளையும், உபநிஷத்தில் சொல்லப்பட்ட வேதாந்த மார்க்கத்தையும் அநுசரித்தார்கள் என்றும் சொல்கிறார்கள். தேவதைகளைக் குறித்த ரூபவர்ணனையை ஸூத்திரங்களில் பார்க்கலாம். ஆனால் அது கல்பனா ஸ்வரூபம்: மூர்த்தி வர்ணனை அல்ல. பிறகு அந்தக் கற்பனையைப் போல் மூர்த்திகளைச் செய்யும் முயற்சி உருப்பெற்றிருக்கலாம். பிறகு வந்த உபநிஷத்துகளிலும் தர்ம சாஸ்திர நிபந்தனைகளிலும் தேவபூஜையைப் பற்றிய விரிவான விவரங்கள் எழுதப்பட்டன. மத்ஸ்ய புராணம், அக்கினி புராணம், விஷ்ணுதர்மோத்தரம் ஆகியவற்றில் மூர்த்தி பூஜை பற்றிய விவரங்களை விரிவாகக் காணலாம்.